C.15
47

53 5000—May '28

# ஜீவனை ரக்ஷிப்பது என்றால் என்ன?

தென்னிந்திய
ஜீவரக்ஷா பிரசாரக சபை
436, தங்கசாலைத் தெரு,
ஜி. டி., சென்னை.

## ஜீவனை ரக்ஷிப்பது என்றால் என்ன?

இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்வதற்கு முன்னமேயே நாம் ஜீவனைப்பற்றி சில முக்கியமான விவரங்கள் அறியவேண்டியது அவசியமாயிருக்கிறது.

## ஜீவன் என்பது என்ன?

(1) ஜீவன் ஞானமயமாயிருக்கின்ற ஓர் வஸ்து. அது சேதனத்துவம் அல்லது அறியுந் தன்மையை முக்கியமான குணமாக உடையது.

(2) ஜீவன் அநாதியாயுள்ளது. ஒருவராலும் அழிக்கக்கூடாதது. அதை ஆயுதங்களால் துண்டு செய்யவும், நீரால் நனைக்கவும், நெருப்பினால் சுடவும், காற்றினால் உலர்த்தவும் முடியாது.

(3) ஜீவன் நமது இந்திரியங்களுக்குப் புலனாகாதது.

(4) ஜீவன் தான் செய்யும் கருமங்களுக்குத் தக்கமாதிரி பற்பல பிறப்புக்களை யடைந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. அது புண்ணிய பலத்தினால் தேவகதியையும், பாவச் செய்கைகளால் நரககதியையும், புண்ணியம் சிறிது மிக்குழி மனிதகதியையும், பாவம் மிகுந்தக்கால் விலங்கு கதியையும் அடைகின்றது. மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியன விலங்கு கதியைச் சேர்ந்தன.

(5) ஒவ்வொரு ஜீவனும் சுவபாவத்தில் கடவுளாகும். இந்த மகத்தான கொள்கையை நம பெரியோர்கள் "தத் துவம் அஸி"—"நீ அதுவாய் இருக்கிறாய்" என்னும் சூத்திரத்தில் கூறியிருக்கின்றார்கள். பிராம்மணனிடத்திலும், பறையனிடத்திலும், அரசனிடத்திலும், குடியினிடத்திலும், மகா தபசியினிடத்தும், சாதாரண மனிதனிடத்தும், மரம், செடி, கொடிகளிடத்தும், நீரில் வாழ்வன வற்றிடத்தும, தரையில் வாழும்

ஜந்துக்களிடத்தும், ஆகாயத்தில் பறந்து செல்லும் பக்ஷிகளிடத்தும் இன்னும் அநேகவிதமான பிராணிகளிடத்தும் உள்ள ஒவ்வொரு ஜீவனும் உண்மையாகவே கடவுளாகும். ஆனால் அவைகள் முன் பிறப்புக்களில் செய்த செய்கைகளுக்குத்தக்க வண்ணம் பற்பல விதமான சரீரங்களையடைந்து அவற்றின் பலன்களை அடைகின்றன.

(6) ஒவ்வொரு ஜீவனும் புண்ணிய கருமங்களின் பலனாக இன்பத்தையும் பாவகருமங்களின் பலனாக துன்பத்தையும் அநுபவிக்கின்றது.

(7) புண்ணியமும் பாவமும் இன்றி சுத்த பரமாத்ம தியானத்தினாலும் நல்ல தபசினாலும் ஜீவன் முக்தியடைகின்றது.

(8) ஒவ்வொரு ஜீவனும் தனக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள்பரியந்தம் வாழ உரிமையிருக்கின்றது. நமக்கு எந்த ஜீவனுடைய ஆயுளையும்

குறைப்பதற்கு அதிகாரமேயில்லை. ஆனால் நம்முடைய அக்ஞானத்தினால் நாம் தீங்கற்ற ஜீவன்களைக் கொல்லுகின்றோம்.

(9) ஜீவனுக்கு முக்கியமான சத்துருக்கள் நான்கு. அவை கோபம், மானம், மாயை, லோபம் என்பனவாம். இந்த நான்கு குணங்களில எதையேனும் உடையவன் தன் ஜீவனுக்கு துன்பஞ் செய்வதோடு பிற ஜீவன்களுக்கும் துன்பஞ் செய்கின்றவனாகின்றான் ஆகையால் ஒவ்வொருவரும் இந்த நான்கு குற்றங்களையும் ஒழிக்கவேண்டும்.

## ஜீவன்களைக் கொல்வதற்கு காரணங்கள்.

மனிதர்கள் பல காரணங்களுக்காக வாயில்லாப் பிராணிகளை வதைக்கின்றார்கள் கொல்லுகின்றார்கள். அவற்றுள் முக்கியமான காரணங்கள் பின் வருமாறு :—1. உணவுக்காக, (2) உடைக்காக, (3) தெய்வத்திற்காக, (4)

வேடிக்கைக்காக, (5) தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக, (6) ஞான விருத்திக்காக. இந் தக் காரணங்கள் எவ்வளவு தூரம் நியாயமான வை என்பதைக் கவனிப்போம்.

(1) **உணவுக்காக கொலை செய்தல்**:—புலால் உண்பது பெரிய பாவம் என்று நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன. வைத்திய சாஸ் திர நிபுணர்களும் சரீர சாஸ்திர ஞானிகளும் புலால், மனிதனுக்கு கெடுதியைச் செய்கின்ற தென்றும் மனிதனுடைய சரீர அமைப்பு சாக பதார்த்தங்களை உண்பதற்கு தகுதியானதே யன்றி புலால் உண்பதற்குத் தகுதியற்றதென் றும் கூறுகின்றார்கள். அநேக கொடிய வியாதி கள் மாமிசம் உண்பதால் உண்டாகின்றன வென்றும் அவர்கள் கண்டு பிடித்திருக்கின் றனர். ஆகையால் உணவுக்காக ஒரு ஜந்துவைக் கொல்வது பிரயோஜனமற்றதல்லாமல் கெடுதி யையும் செய்கின்றது.

(2) **உடைக்காகவும் ஆபரணத்திற்காகவும் கொலை செய்தல்** :—பற்பல விதமான மிருகங்களையும் பக்ஷிகளையும் அவற்றின் தோலுக்காகவும் மயிருக்காகவும் இறகுகளுக்காகவும் வதைத்து கொலை செய்கின்றார்கள். மனிதனுக்கு இயற்கையாய் உண்டாயிருக்கும் அழகு சிறந்ததேயொழிய செயற்கை அழகு எவ்வகையிலும் சிறந்ததல்ல. நாம் அதிக அழகுபெற யோக்கியதை பெற்றிருந்தால் நாம் பிறக்கும்பொழுதே அழகுடன் பிறந்திருப்போம். பக்ஷிகளின் இறகுகளை தலையில் அணிந்துகொள்வதும், பூனையின் தோலையும் பாம்பின் தோலையும் கழுத்தில் போட்டுக்கொள்வதும், இன்னும் பற்பல மிருகங்களின் தோலை பற்பல விஷயங்களுக்கு உபயோகித்துக்கொள்வதும் நாகரிகமென்று சிலர் கருதுகின்றனர். இயற்கை அன்னையின் குழந்தைகளாகிய பல ஜந்துக்களைக் கொன்று அவைகளின் தோலையும் இறகுகளையும் மயிரையும் எலும்புகளையும் மனிதன் அணிந்துகொள்வ

தானது ஒரு வீட்டில் உள்ளவர்களில் சிலர் மற்றவர்களைக் கொன்று அவர்களின் உருப்புக்களை ஆபரணங்களாக அணிந்து கொள்வது போலிருக்கின்றது.

(3) தெய்வத்திற்காக கொலை செய்தல் :— நமமவர்களில் பலர் தமக்கு வரும் துன்பமும் நோயும் நீங்குமானால் ஆடு, கோழி முதலிய ஜீவன்களை தெய்வங்களுக்கு பலிகொடுப்பதாக பிரார்த்தனை செய்துக்கொண்டு அம்மாதிரியே செய்கிறார்கள். இவ்வழக்கம் பெரும்பாலும் மாமிசம் உண்ணும் வகுப்பினரிடத்திலேயே காணப்படுகின்றது. துன்பமும் நோயும் மாமிசம் உண்ணாதவர்களுக்கும் வருகின்றன. ஆனால் அவர்கள் தெய்வங்களுக்குப் பழம், தேங்காய, பொங்கல் முதலியன இட்டே பூசிக்கிறார்கள். நாம் துன்பமடைவதற்கும், ஆடுகளுக்கும் கோழிகளுக்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது. ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் நோய் வரும்

பொழுது அவைகள் மனிதர்களில் ஒருவரைக் கொன்று பலிகொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து அப்படி செய்வதானல் அது நமக்குச் சந்தோஷமாக இருக்குமா? இருக்காது! அம்மாதிரியாகத்தான் இருக்கும் நாம் செய்கிற செய்கையும். எந்த காரணத்திற்காகவும் எந்த ஜீவனையும் கொலை செய்வது பெரும் பாவத்தைக் கொடுக்குமே தவிர எள்ளளவும் புண்ணியத்தைத் தராது. இது நமது சாஸ்திரங்களில் கண்ட உண்மை. ஆனல் அஹிம்ஸா தருமம் பரவி வரும் இந்தக் காலத்தில்கூட பிராம்மணர்கள் ஆடுகளைக் கொன்று யாகம் செய்வது ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகின்றது. சென்ற மாதம் கும்பகோணத்தில் பிராம்மணர்கள் நடத்திய யாகத்தில் எட்டு ஆடுகளை சித்திரவதை செய்து கொன்று அவற்றின் மாமிசத்தை வதக்கிப் புசித்து சோமபானம் செய்ததைக் கேட்க யாருடைய மனம்தான் நடுங்காது. எந்த காரணத்தை முன்னிட்டும் இத்தகைய கொடிய

செய்கைகள் நடைபெறுகின்றவரையில் நம் நாட்டிற்கு எத்தகைய க்ஷேமமும் உண்டாகாது.

(4) வேடிக்கைக்காக கொலை செய்தல் :— மிருகங்களையும் பக்ஷிகளையும் வேட்டையாடி அவைகளை பதைக்கப் பதைக்கக் கொல்வது ஒரு வேடிக்கையாக எண்ணுகிறார்கள். இது என்ன அநியாயம். நம்மைப்போலவே எல்லா ஜந்துக்களும் தங்கள் உறவுகளோடும் சிநேகர்களோடும் இன்புற்று வாழ விரும்பாவா? அப்படியிருக்க நாம அவைகளைத் தங்களினத்தினின்றும் பிரித்து வதைத்துக் கொல்வோமானால் அது நமக்கு இம்மையில் பற்பல கஷ்டங்களையும் மறுமையில் நரககதித் துன்பத்தையும் கொடுக்குமே தவிர சந்தோஷத்தைக் கொடுக்குமென்பது பொய்யான கொள்கை. கொலை செய்கின்றவர்களுக்கு இன்பமென்றால் கொலை செய்யாதவர்களுக்குத் துன்பமா? பெரியவர்கள் துப்பாக்கியைக்கொண்டு வேட்டையாடி

ஞல் அவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுவர்கள் உண்டி வில்லினுல் பக்ஷிகளையும் குவளைகளையும் அணில் ஓணன் முதலிய ஜந்துக்களையும் அடித்துக் கொல்லுகிருர்கள். தும்பியின் வாலில் துடைப்பக்குச்சியைச் சொருகி பறக்கவிட்டு கைதட்டிச் சிரிக்கிருர்கள்; வண்டைப்பிடித்து அதன் கழுத்தில் நூலைக்கட்டி சுழற்றுகிருர்கள். இப்படிச் செய்வதனுல் யாருக்கு என்ன பிரயோஜனம். நமக்குத் துன்பஞ் செய்கின்றவர்களையும் நாம் மன்னித்து விட வேண்டும் என்று சொல்லும்பொழுது நமக்கு யாதொரு கெடுதியையும் செய்யாதிருக்கும பிராணிகளை நாம் கொல்லுவது என்ன கொடுமையான காரியம். மகா பாவமல்லவா?

**(5) தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கொல்லுதல்:**—மனிதர்கள் சில ஜந்துக்களை தமக்குத் துன்பம் செய்யுமென்று பயந்து கொல்லுகிருர்கள். உண்மையில் மனிதன்

தங்களுக்குக் கெடுதி செய்வானென்று பயந்தே அந்த ஜீவன்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மனிதனைக் கண்டவுடன் அவனை எதிர்க்கின்றன. கருணையுடைய எவனை யும் எந்த ஜந்துவும் துன்பம் செய்யாது என்பது நமது சாஸ்திரங்களில் கண்ட உண்மை. நமக்குத் துன்பம் செய்கின்றவர்களையும் நாம் துன்புறுத்தலாகாது என்பது நமது தரும நூல் களின் கட்டளை.

"தனுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை".—திருக்குறள்.

(6) ஞான விருத்திக்காக கொலை செய்தல்:—வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சி யடைவதற் காகவும் மனிதனுடைய சரீரத்தின் அமைப்பை யும் தொழிலையும் அறிவதற்காகவும் நாய், குரங்கு, பூனை, தவளை, முயல், பன்றி, முதலிய பல பிராணிகளை ஆயிரக்கணக்காக தினந்தோ றும் கொலை செய்கிறார்கள். அவைகளை வதைத்

துக் கொல்லும் விதத்தைக் கேட்க யாருடைய மனம்தான் நடுங்காது. நாய் எவ்வளவு உஷ்ணத்தைச் சகிக்க முடியுமென்பதைக் கண்டறிய அமெரிக்காவில் ஒரு டாக்டர் ஒரு நாயை இரும்புக் கூட்டில் அடைத்து அதை நெருப்பிட்டு எரித்துக் கொன்றதாகவும், உணவில்லாமல் பூனையும் பன்றியும் எத்தனை நாட்கள்வரை ஜீவித்திருக்க முடியுமென்பதை யறிவதற்காக அவைகளுக்குத் தினியும் நீரும் கொடுக்காமலே வதைத்துக் கொன்றதாகவும், தோலை உறித்தவுடன் உயிர் எவ்வளவு நேரம் வரையில் உடலில் இருக்கிறதென்பதை யறியவேண்டி குரங்கு, முயல் முதலியவற்றின் தோலை உயிருடன் உறித்ததாகவும் அமெரிக்கா பத்திரிகைகள் கூறுகின்றன. இவ்வாறு மகா கொடிய கொலையைச் செய்து ஞானத்தை அடையாவிட்டால் மனிதனுக்கு என்ன நஷ்டம் வந்துவிடும். என்ன நஷ்டம் வந்தால்தான் என்ன? பல ஜீவன்களைக் கொன்று அதனால் அடையும் ஞானத்தை

விட ஒருவனுக்கு கொலை செய்யாததால் உண்டாயிருக்கும் அஞ்ஞானமே மிகச் சிறந்தது.

" நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ்
சான்றோர்க்குக
கொன்றாகு மாக்கங் கடை."—திருக்குறள்.
நல்லா றெனப்படுவ தியாதெனின்
யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.—திருக்குறள்.

அற்றவர்வருத்தநீக்கி
யாருயிர்கொண்டுநிற்குந
துற்றவிழ் தல்செம்பொற்
றுறக்கத்திற்கேணியாகும்
உற்றுயிரோம்பித்தீங்தேன்
ஊனொடு துறப்பின்யார்க்கும்
மற்றுரையில்லைமண்ணும்
விண்ணுநம்மடியவன்றே
—சீவக சிந்தாமணி.

புராணிகர், காளத்தி

திரு. இ. சிதம்பரசாமி பாண்டியர்

அவர்கள்

அன்பளிப்பு